மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் சிட்கோவின்கீழ் உள்ள 17 தொழிற்பேட்டைகளிலே 1,099 தொழிலாளர் குடியிருப்புகள் கட்டப்பட்டிருக்கின்றன. எனவே, இந்த அரசு ஆணை என்பது கிண்டி, அம்பத்தூருக்கு மட்டுமல்லாமல் தமிழகத்தில் இருக்கிற 17 தொழிற்பேட்டைகளில் இருக்கின்ற அந்தத் தொழிலாளர் குடியிருப்புகளுக்கும் சேர்த்து அரசாணை வெளியிடப்பட்டு இருக்கிறது. எனவே, அவர்களுக்குக் கொடுக்கப்பட இருக்கின்ற வீட்டுமனையினுடைய இடத்தைப் பொறுத்தவரையில் அதன் விலையைப் பற்றித்தான் பிரச்சினைகள் எழுந்துள்ள காரணத்தால் அதுகுறித்து சிட்கோ நிறுவனத்தோடு இன்றைக்கு நாம் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். சிட்கோ நிறுவனமும் அந்த இடத்தின் விலை, சிட்கோ தொழிற்பேட்டையில் உள்ள மேம்படுத்தப்பட்ட மனையின் தற்போதைய விலையையே தொழிலாளர் குடியிருப்புகளுக்கும் அமல் செய்ய பரிந்துரை செய்திருக்கிறது. எனவே, இதுகுறித்து இறுதி முடிவு எடுக்கப்பட்டவுடன் விலை நிர்ணயம் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 131, டாக்டர் அ. ஸ்ரீதரன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

131—

தமிழ்நாட்டில் செயற்கை வைரம் பட்டை தீட்டும் பயிற்சி அளித்தல்.

****21545—டாக்டர் அ. ஸ்ரீதரன்:***

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் Gem cutting and polishing பயிற்சியை ஊக்கப்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஆம்.

முற்பகல் 10-50

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஜெம் கட்டிங் பாலிஷிங் பயிற்சி, அதனுடைய புரோகிரசிவ் ரிசல்ட் நம்முடைய தமிழகத்திலே புரோகிரசிவ் ஆக இருக்கிறதா, அல்லது அதில் ஏதாவது ஏற்றத்தாழ்வு இருக்கிறதா? அந்தத் திட்டம் தமிழகத்திலே பெண்களுக்கு அதிகமான வாய்ப்புகளையும், சலுகைகளையும் தருவதாக இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜெம் கட்டிங், மெருகேற்றுவது என்கின்ற அந்தத் தொழில்களுக்கு மகளிர் தொழில் முனைவோர் பயிற்சி திட்டத்தின் கீழ் பயிற்சி அளிப்பதில், 790 பேர்களில் 256 பேர்களுக்கு அந்தப் பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது. அதேபோன்று இந்த ஆண்டு 800 மகளிர் 3 ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் தொழில்முனைவோர்க்குப் பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதிலே 233 பேர் செயற்கை வைரப் பட்டை ஏற்றல் மெருகேற்றும் பயிற்சிக்கும் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர். தமிழ்நாட்டில் சிறு தொழில்கள் வளர்ச்சி நிறுவனம், சிட்கோ, செயற்கை பட்டை தீட்டும் துறையில் பயிற்சியைத் தனியார் நிறுவனங்கள் மூலம் அளித்து வருகிறது. இதில் கடந்த ஆண்டு 123 பேர்களுக்கும், வருகின்ற ஆண்டு 123 பேர்களுக்கும் பயிற்சியைக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இது அல்லாமல், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களில் செயற்கை வைரம் பட்டை ஏற்றுதல் மற்றும் மெருகேற்றும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விரிவான பதிலுக்கு நன்றி. இருந்தாலும் பாலிஷிங், ஜெம் கட்டிங் போன்ற தொழில்களில் இன்டர்நேஷனல், நேஷனல் மார்க்கெட்டும் என்று செய்கின்ற அந்த ஸ்தாபனத்தோடு இந்த ரா ஸ்டோன்களை கட்டிங் செய்து பாலிஷிங் செய்வதற்குண்டான அந்த வேலைகளை அவர்களிடத்திலே கொடுப்பதற்குண்டான ஒரு Tie-up-ஐ நம்முடைய தமிழக அரசு ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 132, டாக்டர் எம். கருப்புசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

132—

நீலகிரி மாவட்ட மாணவர்களுக்குத் தேக்கு, ஈட்டி மரக்கன்றுகள் வழங்குதல்.

***20523**—டாக்டர் எம். கருப்புசாமி :*

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 6-வது படிக்கும் மாணவர்களுக்கு தென்னங்கன்று வளர்க்க கொடுக்கப்படுவதுபோல், தென்னை வளராத நீலகிரி மாவட்ட